செய்தி வெளியீடு எண்: 921 நாள்: 02.12.2020

## செய்தி வெளியீடு

## புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

இந்திய வானிலை ஆய்வு மையம் தகவலின்படி 28.11.2020 அன்று தென்கிழக்கு வங்கக் கடலில் புதிய குறைந்த காற்றழுத்த தாழ்வுபகுதி உருவாகியுள்ளதாகவும், இது டிசம்பர் 1 மற்றும் 2 ஆம் தேதிகளில் வட இலங்கை வழியாக மன்னார் வளைகுடா கடற்பகுதியினை கடந்து குமரிகடல் வழியே அரபிகடலுக்கு செல்ல வாய்ப்புள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்புயல் எச்சரிக்கை குறித்த தகவல் உடனடியாக அனைத்து மீனவர்கள், மீனவர் கூட்டுறவு சங்கங்கள், ஆழ்கடல் மீன்பிடி ஒருங்கிணைப்பு சங்கங்கள் மற்றும் கிறிஸ்துவ தேவாலயங்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. புயல் எச்சரிக்கைக்கு முன்னரே ஆழ்கடல் மீன்பிடிப்பிற்கு சென்றுள்ள படகுகளை, செயற்கைக்கோள் தொலைபேசி மற்றும் விஎச்எப் தொலை தொடர்பு சாதனங்கள் மூலம் தொடர்பு கொண்டு அருகிலுள்ள மீன்பிடித் துறைமுகங்கள் / மீன்பிடித்தளங்கள் மற்றும் பாதுகாப்பான இடங்களுக்கு கரை திரும்பிட உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும், 29.11.2020 முதல் இராமநாதபுரம் முதல் கன்னியகுமரி வரை உள்ள அனைத்து மீன்பிடி படகுகளும் புதியதாக மீன்பிடிக்கச் செல்ல வேண்டாமெனவும், படகுகள் மற்றும் மீன்பிடி சாதனங்களை பாதுகாப்பாக வைத்திடவும் அறிவுறுத்தப்பட்டனர். இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த அனைத்து மீன்பிடி படகுகளும் பாதுகாப்பாக கரையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அரசு மேற்கொண்ட பல்வேறு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக 02.12.2020ன்படி கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த 120 ஆழ்கடல் மீன்பிடி படகுகள் பாதுகாப்பாக கரை திரும்பியுள்ளன. மீதமுள்ள கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்பட்டினம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்க சென்ற 36 படகுகள் உட்பட 124 தமிழக ஆழ்கடல் மீன்பிடி படகுகள் இலட்சதீவு, கொல்லம், கொச்சின்,

மங்களூரு, கோவா, ரத்தினகிரி, மும்பை மற்றும் வெராவல் அண்மை கடல் பகுதிகளில் உள்ளன. மேற்கண்ட படகுகள் அனைத்தும் தொடர்பு கொள்ளப்பட்டு அவற்றின் இருப்பிட புவிக் குறியீடுகள் குறித்த தகவல்கள் இந்திய கடலோர பாதுகாப்பு படை மற்றும் இந்திய கடற்படைக்கு வழங்கப்பட்டு, அவர்கள் மூலம் கடலில் உள்ள படகுகளை எச்சரித்து கரைக்கு திரும்பிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஆழ்கடல் மீன்பிடி படகுகளை தொடர்பு கொண்டு பாதுகாப்பாக கரை திரும்பிட அறிவுறுத்தும் பொருட்டு கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூர் (தொடர்பு எண்: 04651 – 226235) மற்றும் தூத்துக்குடி மாவட்டம் தருவைக்குளத்தில் (தொடர்பு எண்: 0461 – 2320458) 24 மணிநேரமும் இயங்கும் கட்டுப்பாட்டு அறைகள் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. மீன்வளத்துறை இயக்குநரக மைய கட்டுப்பாட்டு அறையிலிருந்தும் (தொடர்பு எண்:044–29530392) உடனுக்குடன் தகவல்கள் தெரிவிக்கப்படுகின்றன.

கன்னியாகுமரி மாவட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர், மீன்வளத்துறை இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள், தற்போது கடலிலுள்ள ஆழ்கடல் மீன்பிடி படகுகளின் உரிமையாளர்கள் மூலம் மீன்பிடி படகுகளை தொடர்பு கொண்டு புயல் எச்சரிக்கையினை தெரிவித்து உடனடியாக படகுகளை கரை திரும்ப நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அண்டை மாநிலங்களான கேரளா, கர்நாடகா, கோவா மற்றும் இலட்சத்தீவு யூனியன் பிரதேசங்களின் அரசு செயலர்களுக்கு, அம்மாநில மீன்பிடி துறைமுகங்களில் தமிழ்நாட்டை சேர்ந்த மீனவர்களின் படகுகளை நிறுத்துவதற்கு அனுமதி மற்றும் அத்தியாவசிய தேவைகளை வழங்கிடவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த படகுகள் அண்டை மாநிலங்களின் கரைக்கு திரும்பும்போது, அவர்களுக்கு தேவையான தங்குமிடம் மற்றும் உணவு போன்ற வசதிகள் கிடைப்பதை உறுதி செய்திட மீன்வளத்துறை உயர் அலுவலர்கள் கேரள

மாநிலம் கொச்சி, கர்நாடக மாநிலம் மால்பே, மற்றும் மகாராஷ்டிரா மாநிலம் இரத்தினகிரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அரசு மேற்கொண்ட ஒருங்கிணைந்த புயல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் காரணமாக தமிழகத்தைச் சேர்ந்த பெரும்பாலான ஆழ்கடல் மீன்பிடி படகுகள் பாதுகாப்பாக கரை திரும்பியுள்ளன. மீதமுள்ள அண்மை கடலிலுள்ள படகுகளும் விரைவில் பாதுகாப்பாக கரை திரும்பும் நிலை ஏற்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**